**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.16/2026**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw3 |
| Name | : Mohan |
| Father/Husband's Name | : Mani |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மறைமலைநகர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.11.2025 அன்று காலை 11.00 மணியளவில் நான் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் கார்த்திக் காவலர் மற்றும் ஜெயபாரத் காவலர் ஆகியோர்களுடன் பொத்தேரி ஏரிக்கரை அருகே காலை 11.30 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்னை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 50 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும் அங்கு இல்லாததால், அதை நான் மேற்சொன்ன கார்த்திக் மற்றும் ஜெயபாரத் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அதன் பிறகு எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.511/2025 8(c),20(b)(ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்,

எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 50 கிராம் கஞ்சா **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு ரகசிய தகவல் காலை 10 மணிக்கு கிடைத்தது. காவல் ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்து விட்டு பொது நாட்குறிப்பில் குறித்து வைத்து விட்டு சம்பவ இடம் சென்றேன். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு 11.30 மணிக்கு சென்றேன். காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடம் 4 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு செல்லும் போது, லேப்டாப், எடை மிஷின்,மற்ற உபகரணங்களை ஆகியவற்றை எடுத்து சென்றோம். எதிரியை சோதனை செய்த போது, அவரிடமிருந்து அனுமதி கடிதம் எழுதி வாங்கப்பட்டது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏரியிலிருந்து கிழக்கு திசை நோக்கி பார்த்தால் வலது பக்க ஏரியும், இடது பக்கம் எஸ்ஆர்எம் மருத்துவமனையும், கடைகளும் இருக்கும். கைப்பற்றுதல் மகசர் தட்டச்சு செய்யப்பட்டது. அங்கு மருத்துவமனை இருப்பதால் அங்கு மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். அங்கு மக்கள் நடமாட்டம் இருந்தும் ஆஜர் எதிரி மீது தவறான வழக்கு பதிவு செய்வதற்காக போலீசாரே சாட்சியாக இருந்தோம் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் எவ்வளவு எடுத்து சோதனை செய்தோம் என்றால் அதில் சிறிதளவு எடுத்து சோதனை செய்த போது கஞ்சா நெடி வந்ததால் கஞ்சா என்று உறுதி செய்தேன். வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், அவ்வாறு கைப்பற்றி இருந்தால், அதன் புகைப்படமோ, வீடியோவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது தவறான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu